# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No.191/2021**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முருகன் **Dw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். நான் ஏற்கெனவே எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். இன்று எனது தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் நான் சொன்னவைதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அத்துடன் 2 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) தென்காசி நகராட்சிக்கு நான் செலுத்திய சொத்து வரி ரசீதுகள் (15 எண்ணம்) பி.வா.சா.ஆ. 2 வரிசை ஆகும். 2) தென்காசி நகராட்சிக்கு செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் (15 எண்ணம்) பி.வா.சா.ஆ. 3 வரிசை ஆகும். பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். எனது சொந்த ஊர் இலத்தூர் ஆகும். வாதிக்கு சொந்த ஊர் வடகரை ஆகும். பிராது தபசில் சொத்தானது, தென்காசி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள வீடு என்றால் சரிதான். வாதி மதார் மைதீன் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற நபர் என்றால் சரிதான். அவருடைய மகள் மருத்துவர் நூர் ஜமீலா என்றால் சரிதான். வாதியின் மகள் முன்னாள் அமைச்சர் நாகூர் மீரானின் மனைவி என்றால் சரிதான். வாதி ஒரு நிலச்சுவான்தார் என்றால் சரிதான். ஊரில் அவர் ஒரு செல்வந்தர் குடும்பம் என்றால் சரிதான். நான் என்னுடைய பணிக்காலத்தில் எந்தவொரு சொத்தும் வாங்கியதில்லை, யாருடனும் எந்த கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொண்டதில்லை. என்னுடைய பணிக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் வருமான வரி கணக்கை தாக்கல் செய்வது வழக்கம் என்றால் சரிதான். நான் காவல் துறையில் பணிபுரிந்தபோது எனக்கும் முன்னாள் அமைச்சர் நாகூர் மீரானுக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தானது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வாதிக்கு ஒதுக்கப்பட்ட வீடு என்றால் சரிதான். அந்த வீட்டில் நான் குடியிருக்க அனுமதி கேட்டு நாகூர் மீரான் வாதியிடம் பேசி அனுமதி பெற்றுத்தந்ததன் அடிப்படையில் அந்த வீட்டில் நான் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

நான் குடியிருந்த காலத்தில் மாதந்தோறும் வீட்டு வசதி வாரியத்தின் மாத தவணையை செலுத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தில்தான் நான் குடியேறினேன் என்றால் அதற்கு முன்னரே ரூ.1,50,000/- பணத்தை கொடுத்துவிட்டு மாதத்தவணையையும் நான் செலுத்துவதாக பேசிக்கொண்டோம். ரூ.1,50,000/- பணத்தை நான் யாரிடம் கொடுத்தேன் என்றால் அமைச்சர் நாகூர் மீரானிடம் கொடுத்தேன். அவர் அந்த பணத்தை அவரது மனைவியிடம் கொடுத்தார். அதன் பிறகு வீட்டு சாவியை என்னிடம் நாகூர் மீரான் வாங்கி கொடுத்தார். அப்போது என்னுடன் மசூது மற்றும்

முத்துக்குமார் ஆகியோர் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மசூது, முத்துக்குமார் ஆகியோருக்கு என் மீது பகை கிடையாது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 வரிசை தவணை ரசீதுகள்தான் நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்திய மொத்த தொகை என்றால் சரிதான். மாத தவணையை நான் ஒவ்வொரு மாதமும் சரியாக செலுத்தவில்லை என்று சொன்னால் ஆரம்பத்தில் சரியாக செலுத்தினேன், அதன்பின்னர் கொஞ்சம் தவறிவிட்டது. மேற்படி மாத தவணையானது 2020 வரை செலுத்தப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல, 2010 வரை மட்டுமே செலுத்தப்படவேண்டியது. எவ்வளவு தொகையை எத்தனை தவணைகளாக கட்ட வேண்டும் என்பது குறித்து நான் வீட்டு வசதி வாரியத்தை விசாரித்தேனா என்றால் ஆட்கள் மூலமாக கேட்டு தெரிந்துகொண்டேன்.

நான் வாதி மதார் மைதீனுடன் எந்த கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாகத்தான் பேசிக்கொண்டோம். வாய்மொழியாக பேசிக்கொண்டதை நிறைவேற்றித்தரவேண்டும் என வாதியின் மீது எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் ரூ.1,50,000/– கொடுத்த விவரம் என்னுடைய வருமான வரி கணக்கில் துலங்குமா என்றால் துலங்காது. வீட்டிற்கு செலுத்த வேண்டிய மொத்த தொகையையும் வாதி செலுத்தியதன் அடிப்படையில் வீட்டு வசதி வாரியம் வாதியின் பெயருக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளது என்றால் அந்த தொகையை நான்தான் கொடுத்தேன். தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அவருடைய பெயருக்குத்தான் கிரையம் போட்டுக்கொடுத்துள்ளார்கள். நான் கடந்த 2000 ம் வருடத்திலிருந்து வாதிக்கு எந்த வாடகையும் கொடுக்கவில்லை என்றால் வாடகை கொடுப்பதாக எங்களுக்குள் ஒப்பந்தம் கிடையாது. வீட்டு வசதி வாரியத்திற்கு 25.11.2013 ம் தேதி கடைசியாக மாத தவணையை செலுத்தினேன் என்றால் சரிதான். 2013 லிருந்து நாளதுதேதிவரை வாதிக்கு நான் எந்தவொரு

வாடகையோ, தொகையோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் துறையில் பணிபுரிந்து வந்த காரணத்தினால் மேற்படி வீட்டை என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி சட்ட விரோதமாக இருந்து வந்த காரணத்தினால் வீட்டை காலி செய்துகொடுக்கவேண்டும் என்று வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் கொடுத்துள்ளேன். நான் வாதிக்கு வாடகையை கொடுக்காமல் வாதியிடமிருந்து வீட்டை அபகரிக்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கை நடத்திவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது தபசில் வீடு ரூ.5,000/- வாடகைக்கு போகும். வாதி பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்பட்டவுடன் எனது பெயருக்கு அவர் கிரையம் செய்து கொடுப்பதாக நாங்கள் பேசிக்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் தபசில் வீட்டை ஏராளமான பொருட்செலவில் மேம்படுத்தியுள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தபசில் வீட்டை காலி செய்து வாதியிடம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi